1995 மார்ச் 15]

தலைவியின் பொற்கால ஆட்சியில்தான் சுற்றுலாத் துறை என்பதைப் பற்றி வீடியோ படங்கள் மூலமும், சுற்றுலா விழாக்கள் மூலமும், பொருட்காட்சிகள் மூலமும் பொதுமக்களிடையே நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளபடியால், தனியார் துறையில் கோல்ப் மைதானம் அமைக்க முன்வருபவர்களை அரசு ஊக்குவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களில் சுற்றுலாத் துறை மற்றும் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மூலமும் அங்கே விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதைப்போல ஏற்காட்டிலும் கோல்ப் விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் உள்ளாட்சித் துறையோடு கலந்து பேசி உரிய கருத்துரு முறையாக தயாரிக்கப்படும். அதைப்போல சிறுவர் இரயிலைப் பொறுத்தளவில் அந்தத் திட்டம் தற்போது சுற்றுலாத் துறையினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன், மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்.

20—

பெண்ணாகரம் தொகுதியில்
கிராமிய நூற்பு மையம் துவங்குதல்

**34292—டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்:*

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பெண்ணாகரம் தொகுதியில் கிராமிய நூற்பு மையம் துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம், பெண்ணாகரம் தொகுதியில், நாகராசம்பட்டி, சின்னம்பட்டி ஆகிய இரண்டு ஊர்களில் கிராமிய நூற்பு மையம் அமைக்க கதர் வாரியத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[1995 மார்ச் 15

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தர்மபுரி மாவட்ட மக்களின் தொழில் மற்றும் பொருளாதார மேம்பாடு கருதி, ஒன்பதாவது வட்டமாக போச்சம்பள்ளியை அறிவிக்கச் செய்த நம்முடைய இதய தெய்வத்திற்கு தர்மபுரி மக்கள் சார்பாக இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, தர்மபுரி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய தொகுதியான பெண்ணாகரத்தில் மேற்படி நூற்பு மையங்கள் எப்போது செயல்படுத்தப்படும்; எத்தனைப் பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்படும் என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1.4.1995* அன்று நாகராசம்பட்டியிலும், *1.5.1995* அன்று சின்னம்பட்டியிலும் தொடங்கப்படவிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், இந்த இரண்டு கிராமிய நூற்பு மையங்கள் மூலம் *50* கிராமப்புற பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11–10

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கிராம நூற்பு மையங்களில் கணவனால் கைவிடப்பட்ட இளம் பெண்களுக்கும், விதவைகளுக்கும் சிறப்புப் பயிற்சி கொடுக்க ஏதேனும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்றவர்கள் போன்றவர்களுக்கு இது போன்ற கிராம நூற்பு மையங்களில் முன்னுரிமை கொடுத்து, பயிற்சிக் கொடுக்கப்பட்டு பணிகளில் அமர்த்தப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு** : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

TRUTH ALONE TRIUMPHS